1967 ஜூலை 7]

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், இந்த 'வானெலி' என்ற பெயர்கூட, வாணி என்ற சமஸ்கிருதச் சொல்லும், ஒலி என்ற தமிழ் சொல்லும் சேர்ந்து ஏற்பட்டது என்ற தவருன கருத்து ஏற்படுகிற காரணத்தினுல், அதைத் தவிர்த்து, இதற்கு சுத்த, சுயம் பிரகாசமான தமிழ்ப் பதம் ஒன்றைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வானெலி என்ற பெயரே சுத்த சுயம்பிரகாசமான பதமாக இருக்கிறது. அதற்கே அனுமதிப்பதில் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : உறுப்பினர் அவர்கள் சுத்த சுயம்பிரகாசமான தமிழ்ப் பதம் வேண்டும் என்று சொல்லுகிருர். சுத்த சுயம்பிரகாசம் என்பதுகூட தமிழ்ப் பதம் அல்ல.

திரு. கே. விஞயகம் : இந்த முயற்சி எந்த அளவில் இருக்கிறது இப்போது ? சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா ? அது அமுலுக்கு வந்ததா ? நேற்று இரவு கூடக் கேட்டேன் ; 'ஆகாசவாணி' என்றுதான் சொல்லப்படுகிறதே, இது குறித்து நிலைமை என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இதுகுறித்து பேரரசு அமைச்சர் அவர்கள் கவனிப்பதாக உறுதி கூறிவிட்டுப் போயிருக்கிருர். இடையிலே செல்வாக்கு உள்ளவர்கள் கொடுக்காமல் இருந்தால் முடியும் என்று நினைக்கிறேன்.

சித்த வைத்தியக் கல்வி

***196 விஞ.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்தக் கல்வி பாட நூல்கள் கமிட்டி என்ற பெயரில் நிபுணர் கமிட்டி அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார், யார் ?

(உ) தற்போது அக்கமிட்டியின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை : சபை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது ? இந்தக் கமிட்டி எத்தனை முறைகள் கூடி என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? திருத்தி எழுதுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நூல்கள் எவை எவை ? பழைய சித்தர்கள் எழுதிய

---

a 353–355-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நூல்களையெல்லாம், அகஸ்தியர் எழுதிய நூல்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து ஏதாவது முடிவுக்கு வருவதற்கான உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எத்தனை முறைகள் கூடியது என்ற விவரம் இல்லை. இந்தக் கமிட்டி கூடி பி.ஐ.எம். சித்த பாடத்திற்குப் போதிய நூல்களை எழுதுவதற்கும், ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நூல்களைத் திருத்தி எழுதுவதற்கும், அதுபற்றி உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் அதையும் கவனிக்கலாம் என்று நினைக்கிறேன்.

Loans from Government of India

* 190 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Government proposes not to pay interest to the Centre on the debts incurred by our Government?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இல்லை.

திரு. கே. விநாயகம் : ஸார், கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறதா இந்த அரசாங்கம்? அல்லது, கொடுக்காமலே மறுத்துவிடலாம் என்று சொல்லுகிறதா? அதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கடன் கொடுத்தவர்களுக்கு இல்லாத அக்கறை உறுப்பினருக்கு இருப்பது விந்தைதான். ஆனால், இதைத் தள்ளி வைக்கவேண்டும் என்று நான் சொல்லியிருப்பதிலேயே, கொடுக்க இருக்கிறேன் என்பது தொக்கியிருக்கிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகள் உதவித் தொகையாகக் கொடுக்கும் பணத்தை இந்திய அரசு மாநில அரசுகளுக்குக் கடனாகத் தந்து, வட்டியும் அசலுமாகச் சேர்த்து வசூலிப்பது நியாயமற்ற போக்கு என்பதால், தமிழக சர்க்கார் இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளதா? இந்த வகையில் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் வட்டியாகக் கொடுத்திருக்கிறோம். அதை அசலில் கழிக்கவேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெற்றிருக்கிற பல்வேறு கடன்கள் ஆராய்ச்சிக்கு உரியனவாகவும், சில கடன்கள் தள்ளுபடி செய்யத்தக்கனவாகவும், சில கடன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வட்டி விதங்கள் மாற்றி அமைக்கப்படத்தக்கனவாகவும், சில கடன்ள் ஒருமுகப்படுத்தப்படத்தக்கனவாகவும் இருக்கின்றன என்பதை மத்திய சர்க்கார் அறிந்திருக்கிறது. இதை ஏற்கெனவே ஃபைனான்ஸ் கமிஷனெல்லாம் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றன.